*கவனிக்க.- 06.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1828 - 2013 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2013.09.13

*1828 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1202 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1202 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

B2-B80753

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஐப்பசி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆவணி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | வலல்லவிற்ற | இற்றபன பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பஸ்துன் கோரளை மேற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |

9-316

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை-2013

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக 2012.11.23 ஆந் திகதியையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தலின்படி விண்ணப்பம் முன் வைத்த விண்ணப்பதாரிகள் இதன் பிரகாரம் மீண்டும் விண்ணப்பம் அனுப்பவேண்டிய அவசியமில்லை)

இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி 2013.09.30 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் கூடாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2013.10.14 ஆகும். சகல விண்ணப்பப் படிவங்களும் இத்தினத்திற்கு முன்பு “பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை” எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப் படிவமும் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது கையில் கொண்டுவந்து

பாரமளித்தலோ செய்யக்கூடாது. பூரணமற்ற மற்றும் முறையற்ற, தேவையான தராதரத்தைக் கொண்டிராத, உரிய முறையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதித்து அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை அந்தந்த நிறுவனத்தின் பிரதானியினூடாக குறித்த தினத்திற்கு முன்பு அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்கான பரீட்சை நிலையம் அமைப்பதற்கான நகரமும் நகர இலக்கமும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தின் மேல் தலைப்பில் இந்நகர இலக்கத்தை அட்டவணைப்படி பூரணப்படுத்தல் வேண்டும். தேர்ந்தெடுத்த நகரத்தை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதியளவான விண்ணப்பதாரிகளைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள்.

**1 ஆம் அட்டவணை**

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம்.

2. **பதவியின், கடமையின் தன்மை**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் தரத்தின் கடமை மேற்கொள்ளல் சகல புகையிரத பாதுகாப்பு நியதி, ப்ளொக் நியதி, புகையிரத உபதேச கோவை போன்றவற்றின் கோட்பாடுகளை கடைப்பிடித்து புகையிரத பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் புகையிரத போக்குவரத்தின்போது ஒப்படைக்கப்படும் கடமை பட்டியலின்படி கடமை மேற்கொள்ளல்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பயிற்சிக் காலத்தின் முதல் வருடத்திற்குள் மாதாந்தம் ரூபா 12,920 உம், இரண்டாம் வருடம் மாதாந்தம் ரூபா 13,040 ஆக கொடுப்பனவு வழங்கப்படும்.

பாதுகாவலர் III ஆம் வகுப்புக்கான சம்பள அளவுத்திட்டம் (எம்என்-3 2006-ஏ) ரூபா 15,005-4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-27,885 ஆகும்.

4. (அ) **கல்வித் தகைமைகள் :**

(I) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு விடயங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் 06 (ஆறு) விடயங்களில் சித்தியடைந்திருத்தல்

உடன்

(II) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் தூயகணிதம், பௌதிக விஞ்ஞானத்துடன் மேலும் ஒரு விஞ்ஞான விடயம் உட்பட சகல விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் விஞ்ஞான விடயம் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- மேலுள்ள (அ) (I) உடன் (II) இல் உள்ள அடிப்படைத் தகைமையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரம் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் :

(I) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(II) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(III) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(V) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆம் பகுதி திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தியிருத்தல்

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடம் கருத்து கேட்டறிந்ததன் பின்பு மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்

நுட்ப தராதரத்திற்கு சகல வழிகளிலும் சமமானதாக இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தராதரம் பெற்றிருத்தல்.

(இ) ***உடற்தகுதி :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு சகல வழிகளிலும் உடற்தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கேற்ற போதுமான அளவு உடற்தகுதியையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) உயரம் குறைந்தது 5 அடி 4 அங்குலத்தை உடையவராக இருக்கவேண்டியதுடன், மூச்சு வெளியிடும்போது நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(iv) 6/6, 6/6 அளவிலான கண் பார்வையளவு பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) ***வேறு தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாகும்.

***குறிப்பு.***- இவ் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று மேற்குறிப்பிட்ட சகல தராதரங்களையும் பூரணப் படுத்தி இருக்க வேண்டும். தராதரங்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி சான்றிதழ்களின் பிரதி விண்ணபப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (04) இல் குறிப்பிடப் பட்டுள்ள தராதரங்களை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் திறமையின் வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடம் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சைத் திட்டம்** :

(i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் நடாத்தப் படும் ;

(ஆ) சகல கேள்வித்தாள்களுக்கும் தோற்ற முடிவது மேலுள்ள (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலமாகும். விண்ணப்பித்த மொழி மூலம் பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சை விடயங்கள் :

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) விடய உள்ளடக்கம் :

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான விவரணம் மற்றும் விளங்கப்படுத்தும் திறமை, சரியான முறையில் நிகழ்வு அனுமானத்திற்கு வரும் திறமை, பொது அறிவு மற்றும் புத்திக்கூர்மையை பரிசீலிக்கும் வகையில் நோக்காகக் கொண்டு இக்கேள்வித்தாள் தயாரிக்கப்படும். இது கணித குளறுபாடு, பொது அறிவு, சூழல் சம்பந்தப்பட்ட கேள்விகளை உள்ளடக்கிய பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வழங்கும் அமைப்பிலான கேள்வித்தாளாகும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (காலம் : 3 மணித்தியாலம்)
- புள்ளி 100 ஆகும்.

அடிப்படை தொழில்நுட்ப அறிவும் மற்றும் இயந்திர உபகரணம் சம்பந்தமான அறிவையும் அளவிடுவதற்கு தயாரிக்கப்படும் கேள்வித்தாளாகும். சகல கேள்வி களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கும் முறை.- ஒவ்வொரு விடயங்களிலும் 50 வீத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்றதாக கருதப்படுவதுடன், இப்பரீட்சையின் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும். இந்நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி இலங்கை புகையிரத தொழில்நுட்ப சேவையின் இலங்கை சேவையின் பாதுகாவலர் பயிற்சித் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது மேலுள்ள 6 இல் IV இன்கீழ் குறிப்பிடப் பட்டுள்ள காரணங்களின்கீழ் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் அடிப்படையிலாகும்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவ தற்குமான அறிவுறுத்தல்**.- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 8 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 9 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள்

குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக் கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். அதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-03 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எப்பிரதேசத் தினதும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு விண்ணப்பப் படிவத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் மற்றும் வேறு வழிகளில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசன முடையதாக அமையும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை - 2013" எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற, விண்ணப்பித்த நகரத்தையும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், அ. நி. சு. இல. 06/2006 இன்படி ரூபா 19,755 ஆன மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின் படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகாவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையே குறிப்பிட்டு உமது வேண்டுகோள் கடிதத்தையும் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு தொலைநகலூடாக தெரிவித்து அது தொடர்பாக விசாரித்தல் மிகவும் பயனுடையதாக விருக்கும்.

(viii) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பரீட்சை அனுமதி அட்டையின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைக்க வேண்டுமாகும். அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(ix) இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காகவேண்டி ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(x) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(xi) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

*8.* **சேவை நிபந்தனை**.- ஆட்சேர்ப்பு செய்யப்படுவது பயிற்சித் தரத்திற்காவதுடன், அக்காலத்தில் முதலாம் வருடத்தில் மாதாந்தம் ரூபா 12,920 ஆன கொடுப்பனவும் 2 ஆம் வருடத்தில் மாதாந்தம் ரூபா 13,040 ஆன கொடுப்பனவும் வழங்கப்படும். பயிற்சிக்காலம் இரு வருடங்களாகும். பயிற்சியை திருப்திகரமாக நிறைவேற்றியதன் பின்பு III ஆம் வகுப்புக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் குறித்த சம்பள திட்டத்தில் ஆரம்ப நிலையில் வைக்கப்படுவர்.

*9.* **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை**.- (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாடுகளின்படி அரச சேவைக்குச் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தேர்ச்சியை 5 வருட காலத்திற்குள் பெறல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சியைப் பெறும் வரையில் மறுக்கப்படும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தாபன செயற்பாடுகளுக்கும் நியதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும். அதேபோன்று அடிக்கடி அரசாங்கத்தினால் வழங்கப்படும் கட்டளைகள், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்பட கடமைப்பட்டுள்ளீர்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை வாசித்து நன்றாக புரிந்துகொள்ளவும்.)

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

| | |
|---|---|
| பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்) | ☐ |
| பிரசாவுரிமை :<br>பரம்பரை மூலம் - 1<br>பதிவு மூலம் - 2<br>(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்) | ☐ |

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு : விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

பரீட்சை அறிவித்தலின் ஆரம்ப பந்தியை பார்க்கவும். விண்ணப் பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

**இலங்கை புகையிரத திணைக்களம்**

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை- 2013**

Sri Lanka Railway Department

Written Competitive Examination for Recruitment of External Candidates for The Post of Guard Trainer Grade, 2013

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
   (உதா : PERERA, R. M.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

3. நிரந்தர முகவரி :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/பெண் தன்மை :—
   பெண் - 1
   ஆண் - 0 ☐
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. இனத் தொகுதி :
   சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலே-6 ☐
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
   ☐☐☐☐☐☐☐☐☐☐

7. வதிவிடம் :
   (i) கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் :- ☐
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
   (iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
   (ii) 2013.10.14 ஆந் திகதியன்று வயது :–
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. கல்வித் தராதரம் :
   (i) க. பொ. த. (சா. தரம்) :
   சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |
| (v) | | |
| (vi) | | |
| (vii) | | |
| (viii) | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக)

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாததால் அல்லது பிழையான முறையில் உடன்/ அல்லது உண்மைக்குப் புறம்பான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பத்தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதை நான் நன்றாக அறிவேன். அதனால் ஏற்படும் நஷ்டத்தை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் கீழ்ப்படிவதாக தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்..

(இ) 2012 ............................. ஆந் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட இலக்கம் ................................ உடைய பற்றுச் சீட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இணைக்கவும் (ஒட்ட வேண்டாம்) (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி ஒன்றை எடுத்து வைத்துக்கொள்ளவும்) |
|---|

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை பின்பற்ற இணங்கிக் கொள்கிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைத்துள்ள திரு. ................. .................. என்பவர் ............................... இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................................. ஆந் திகதியிலிருந்து .......................... வரை ....................... ஆக சேவை செய்கின்றார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் உள்ளது/ இல்லை. அவரின் சேவை நடத்தை, கடமைக்கு சமுகம் தரல் திருப்திகரமானதாகும்/ அதிருப்திகரமானதாகும். குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அப்பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
திணைக்கள/ நிறுவன தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

9–229

---

## வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் தொழில்நுட்பம் சாராத பாகம் 2 இற்கான வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் (WILD LIFE GUARD) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2013

இத்திணைக்களத்தில் நிலவும் வெற்றிடம் தொடர்பாக தொழில்நுட்பம் சாராத பாகம் 2 இற்கான வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2013.09.22 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். 1 முதல் 60 வரை முதலாம் பக்கத்திலும் 7 முதல் 12 வரை அடுத்துவரும் பக்கங்களிலும் அமையும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அதில் தமது கையெழுத் தினைக் கொண்டு, முழுமையான தகவல்கள் தெளிவாக உள்ளடக்கப் படல் வேண்டும். அத்துடன் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையான விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் முன்னறிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் அவர்களது விண்ணப்பப்படிவங்களின் நிழற்பிரதிகளை அவரவர் வசம் வைத்திருப்பது பயனுடையதாகும்.

3. **இப்பதவிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு அமையும் :**

ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 ரூ. 22,040. (எம்என் 01-2006ஏ)

4. **சேவை நிபந்தனைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

5. **வயதெல்லை.-** 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள் :**

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்தில் (01) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

7. **தேகாரோக்கியம்.-** (i) சிறந்த தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ii) எல்லா பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவாறும், பதவியின் பணிகளை நிறைவேற்றக் கூடியவாறும் போதிய தேகாரோக்கியம் உடையவராகவும், சிறந்த மனநிலையுடன் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 4 அங்குலம் உயரத்திற்குக் குறையாதவராகவும் பெண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாதவராகவும் இருத்தல் வேண்டும்.

8. **பிற.-** (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் 2

(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில்/வர்த்தமானி யில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லாவகையிலும் பூரணப்படுத் தப்பட்டு இருத்தல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறை.-** (1) எழுத்து மூல பரீட்சையில் சித்தியடைந்த வர்களுள் திறமை முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தொகையினரைப் போன்று ஐந்து மடங்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, எழுத்துமூல பரீட்சையின்போதும் நேர்முகத் தேர்வின்போதும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(2) வன ஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களும் 06 மாத காலம் பயிலுநர் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதுடன், அக் காலஎல்லை தொடர்பாக கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்படும். குறித்த பயிற்சிப் பாடநெறியினை சிறப்பாகப் பூர்த்திசெய்யும் அலுவலர்கள் மாத்திரம் அப்பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தகைமையுடையவர்கள் ஆவதுடன், பயிற்சிக் காலத்தின் போது சேவையை விட்டுச் செல்லும் அல்லது பயிற்சியினை முழுமையாகப் பூர்த்தி செய்யாதவர்கள் மீண்டுமொரு முறை இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையை இழக்கின்றனர்.

10. **எழுத்துமூலப் பரீட்சை.-** கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பரப்பு தொடர்பாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். இவ் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைவதற்கு வினாத்தாளுக்கு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எழுத்துமூலப் பரீட்சையிலும் நேர்முகத் தேர்விலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

*பரீட்சை பாடப்பரப்பு.-* நுண்ணறிவுப் பரீட்சை (Intelligent Test) - (நேரம் : 1 மணித்தியாலயம்) - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

*பாடவிதானம்.-* நுண்ணறிவுப் பரீட்சை (Intelligent Test).- விண்ணப்பதாரர்களின் கிரகித்தல், தர்க்கத் திறன், பகுப்பாய்வு விவேகம் மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை இனங்காணும் பொருட்டு பல்தேர்வு மற்றும் சுருக்க வினாக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வினாத்தாளில் 50 வினாக்கள் உள்ளடங்கியுள்ளதுடன், எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*பரீட்சைக் கட்டணம்.-* பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். அப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-03-13 இற்கு பற்று வைக்கும் வகையில் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அலுவலகத்துக்கு அல்லது பிரதேச செயலகத்துக்கு செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். குறித்த பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பரீட்சை தொடர்பாக செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

(1) இப்பரீட்சை இங்கு தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பப் படிவத்தில் தான் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் நகரம் மற்றும் நகர எண் விருப்பத் தெரிவின்படி முறைப்படி குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் நகரத்தில் பரீட்சை நடத்துவதற்கு போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து அந்நகரத்திற்கு கிட்டிய நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றில் பரீட்சை எழுதுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றஞ்செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.

(2) வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்களே பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோலின் அடிப்படையில் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட உடனேயே இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் அதுபற்றி நாளிதழ்களில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லையாயின், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசமுள்ள விண்ணப்பப்படிவத்தையும், பணஞ்செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதியையும், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பும்போது பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், விண்ணப்பதாரர் கொழும்பு அல்லாது புறநகரில் வசிப்பவராயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு உமது வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது சாலச்சிறந்ததாகும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்கு உள்நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது என்பதன் மூலம் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்படலாகாது.

(4) **பெறுபேறுகளை வெளியிடல்**.- எழுத்துமூலப் பரீட்சையிலும், நேர்முகத் தேர்விலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை மையமாகக் கொண்டு திறமை முன்னுரிமையின் அடிப்படையில் பெறுபேறு அட்டவணை தயாரிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு நிகராக சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அடங்கிய பெறுபேறு அட்டவணை வனஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையிலும், நேர்முகத் தேர்விலும் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் ஒவ்வொரு பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டு பெறுபேறு அட்டவணை தனித்தனியாக வழங்கப்படும்.

11. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் அனைத்து பரீட்சார்த்திகளும் மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை சம்பந்தமாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அத்துடன், அச்சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவர்.

13. **நேர்முகப் பரீட்சை**.- வனஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பிரமாணங்களின் அடிப்படையில் நன்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பாக ஒரு விண்ணப்பதாரருக்கு ஆகக்கூடியது 100 புள்ளிகள் வழங்கப்படும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வன ஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திற்கே உண்டு. அதுபோன்றே வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாது விடுவது அல்லது வெற்றிடங்களில் அரைவாசியை நிரப்புவது தொடர்பாக வனஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.

15. இது குறித்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களில் ஏதேனும் இணக்கப்பாடு காணப்படாதுவிடத்து, சிங்கள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகச் சரியானது எனக் கருதுதல் வேண்டும்.

எச். டீ. ரத்நாயக்க,
வன சீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம்.

**அட்டவணை**

பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கம்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருணாகலை | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்துக்காக)

**வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின், தொழில்நுட்பம் சாராத பாகம் 2 இற்கான வன சீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் (பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open Competitive Examination For The Recruitment To The Posts of Wild Life Guard Non Technical - Segment 2 in The Department of Wild Life Conservation - 2013

பரீட்சை தொடர்பாக விண்ணப்பிக்கும் நகரமும் நகர இலக்கமும் அறிவித்தலுக்கு அமைவாக

| | நகரம் | நகர எண் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்.)

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ-ம் : SUNIL, A.B. :----.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.2 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :

   பெண் - 1,
   ஆண் - 0

   (உரிய இலக்கத்தை எழுதவும்)

   3.2 பிறந்த திகதி :

   ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

   வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. வதியும் மாவட்டம் :----.
   பிரதேச செயலாளர் பிரிவு :----.

6. தற்போதைய பதவியும் பணிபுரியும் நிறுவனமும் :----.

7. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

8. கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அல்லது அதற்கமைய தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

9. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரமும் என்னால் உண்மையற்ற விபரங்கள் வழங்கப்பட்டுள்ளதென நியமனம் வழங்குவதற்கு முன்னரோ பின்னரோ தெரியவரும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் பதவியிறக்கம் செய்யப்படுவதற்கு இணங்குகின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேலும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

(i) இலக்கம் :----. (iii) பணம் செலுத்திய இடம் :----.
(ii) திகதி :----. (iv) செலுத்திய தொகை ரூபா :

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-** இவ்விண்ணப்பதாரர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும், அவர் இன்றைய தினம் என் முன்னிலையில் இங்கு தனது வழமையான கையொப்பத்தை இட்டார் எனவும் இக்கையொப்பம் அவருடைய தெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

(அரசாங்க பாடசாலை அதிபர், சட்டத்தரணி, சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளர், பிரதேசத்தின் கிராம அலுவலர், வணக்க வழிபாட்டுத் தலமொன்றின் மதப்போதகர் அல்லது அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஆகிய எவரேனும் ஒருவரால் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

12. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :** (அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில்/அரசாங்க கூட்டுத்தாபனத்தில்/நியதிச்சட்ட சபையில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பாக மட்டும்)

இந்நிறுவனத்தில் ................................................................ பதவி வகிக்கும் ............................................................... என்பவரின் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானவை எனவும் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படவில்லை எனவும், அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கருதவில்லை எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அப்பற்றுச்சீட்டு இங்கே கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளது எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவ் அலுவலர் பதிலீடு இன்றி சேவையில் இருந்து விடுவிக்கப்படுவார் என அறியத்தருகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திணைக்கள/நிறுவனத் தலைவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
பதவி முத்திரை :----.

9-327

---

## அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும் - 2011 (I) (2013)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சை மற்றும் கணனித் திறனை அளவிடும் எழுத்துப் பரீட்சை என்பன 2013, திசெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 1372/23 ஆம் இலக்க 2004.12.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகள் என்பனவற்றுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2013, ஒற்றோபர் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க

மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

7. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் இலக்கம் 5.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய தயாரித்தல் வேண்டுமென்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்புதலாகாது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ளதான விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது என்பதில் பரீட்சார்த்தி கவனமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம் பாடத்திற்காக மட்டும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 200 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்குமாறு தீவிலுள்ள ஏதேனுமொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலிட்டமைக்கான பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியே என்றால் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிடப்பட்ட உங்கள் கோரிக்கை கடிதம் என்பவற்றுடன் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | பாட இலக்கம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் | 01 | 1 மணித்தியாலம் | 100 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 02 | 1 மணித்தியாலம் | 100 |
| 3. கணனிப் பரீட்சை | 03 | 1 1/2 மணித்தியாலம் | 100 |

13.1 அலுவலக முறைமைகள்.- (பாட இலக்கம் 01).- அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின்கீழ் கடிதமொன்றை வரைவு படுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.2 கணக்கீட்டு முறைமைகள்.- (பாட இலக்கம் - 02) அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங் களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத் தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.3 கணனிப் பரீட்சை.- (பாட இலக்கம்-03) பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும் :-
தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்
''வின்டோஸ்'' இயக்க முறைமை
கோப்பு முறை

**சொல்முறை வழிப்படுத்தல் -**

அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உட்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டு பிடித்தலும் மாற்றிடுதலும், இலக்கணம், தேசோரஸ்
நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்
ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள்
தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்
கோப்பு முகாமை
அஞ்சல் இணைப்பு
'மக்ரோ' தொழிற்பாடு

விரிதாள் -

அடிப்படைத் திறமைகள்
வடிவமைத்தல் (Formatting)
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல்
தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
@ பயன்பாடு @ function)
மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை

தரவுத்தளங்கள் -

அறிமுகம், அடிப்படைத் திறமை
தரவுத்தளங்கள் உருவாக்கலும் பிரயோகமும்
படிவங்கள்
இணைப்புப் படிவங்கள், மேல்வரும் படிவங்கள், உரையாடல், தகவல் பெட்டிகள் (popup forms)
வினாக்கள்
வரிசைப்படுத்தல்
அறிக்கைகள்
மக்ரோக்களுடன் பணி செய்தல்

நிகழ்த்துக்காட்சி/வரைகலை -

அடிப்படைத் திறமைகள்,
பதிப்பித்தல், வடிவமைத்தல்
வடிவமைப்பு பிரயோகித்தல், படிவங்களை
செருகுதல், ஆயத்தப்படங்களும் வரைபடங்களும்
படவில்லை காட்சிகளும் விளைவு அசைவூட்டலும் (master)
நிகழ்த்துக் காட்சி கருவிகளைப் பயன்படுத்தல்,
முதன்மைகளைத் தயாரித்தல், படவில்லைகள்
குறிப்புகள் அச்சிடல்

இணையம் -

இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழி கண்டறிதல் இணையச் செயல்முறை

மின்னஞ்சல் (e-mail) -

அறிமுகம், அடிப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல்
- இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது :-

பகுதி I – பல்விருப்பு/சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந் திருக்கும்.
காலம் : 45 நிமிடங்கள் - (40 புள்ளிகள்)

பகுதி II – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் : 45 நிமிடங்கள் - (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 5:1:2 இன்படி தேசிய பயிலுநர் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணனி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு அல்லது கணனி நடவடிக்கை உத்தரவுச்சீட்டுக்கு சமமான அல்லது அதைப் பார்க்க உயர்மட்ட தரத்தைக் கொண்டுள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் www.pubad.gov.lk/web/eservices/images/stories/special notice/com%28itrelease%2920121108.pdf என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட கணனி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணனி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர். மேலும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் அளிக்கப்படும் கணனிப் பிரயோக உதவியாளர் (NVQ மட்டம் 3) சான்றிதழினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களும் கணனித் திறன்கள் மீதான எழுத்துமூலப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

14. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2013, ஓகத்து 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனி ஆற்றலைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும்-2011 (I) (2013)**

EFFICIENCY BAR EXAMINATION AND THE WRITTEN TEST ON COMPUTER SKILLS FOR OFFICERS IN CLASS III OF PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE - 2011 (I) (2013)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்பு ஒழுங்கின்படி குறிப்பிடவும்.)
(இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
உதா : Mr. SILVA A. B)
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

3.
3.1 பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :-
☐☐☐☐☐☐☐☐☐☐

4. நீங்கள் இம்முறை தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :-
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 13.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

5. தற்போது வகிக்கும் பதவி -
5.1 பதவி :----.
5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.
6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.
6.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
6.3 மாவட்ட/பிரதேச செயலகம் :----.
6.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
6.5 திகதி :----.

முழுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்காக ரூபா 200 உம் ஆவதுடன் அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ரூபா ................................ பெறுமதியான பற்றுச்சீட்டு எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்த திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவர் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப் படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
2. இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் *தோற்றியுள்ளார்/தோற்றவில்லை என்றும் ;
3. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
4. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

*தேவையற்றவைகளைக் கீறிவிடவும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

9-328

---

## இடர் முகாமைத்துவ அமைச்சு

வளிமண்டலவியல் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையில் (வளிமண்டலவியல் அவதானி/தொடர்பாளர் பதவிகளுக்கான) பயிற்சி அளிக்கப்படும் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடங்கள் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பதவிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு தகைமையுள்ள இலங்கை குடிமக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 பதவியின் பெயர் : வளிமண்டலவியல் அவதானி/தொடர்பாளர்
1.2 பதவியின் கடமைகளின் தன்மை :

* வளிமண்டல விஞ்ஞானபூர்வமான தரவுகளைத் திரட்டல்
* வளிமண்டலவியல் கருவிகளைப் பராமரித்தல்
* வளிமண்டலவியல் தரவுகளை வெளி நிறுவனங்களுக்கு வழங்கல்
* வளிமண்டலவியல் தரவுகளை இணையப் பக்கத்தில் உள்ளீடு செய்தல்
* விசேட வளிமண்டலவியல் தரவுகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றும் அவற்றை அறிக்கையிடல்

2. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி நியமனம் வழங்கும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் யாவற்றையும் அல்லது யாதேனும் எண்ணிக்கையை நிரப்பாது விடுவதற்கு நியமனம் வழங்கும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

*3.* ***சம்பளம் :***

தொகுதி-இலக்கம் *01 -*

| *தரம்* | *சம்பள அளவுத் திட்டம்* | *ஆரம்ப மாதாந்த சம்பளம்* |
|---|---|---|
| பயிற்றுவித்தல் தரம் | இல்லை | *1 ஆம் ஆண்டு மாதாந்தம் ரூபா 12,920*<br>*2 ஆம் ஆண்டு மாதாந்தம் ரூபா 13,040*<br>**பொ. நி. சு.*<br>*06/2006* (II) *இல் 14 ஆவது பிரிவில் 9 ஆவது ஒழுங்கு விதிக்கு உட்பட்டது* |
| III தரம் | *மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (எம்என் 3-2006ஏ)* | *ரூபா 15,005* |
| II தரம் | *மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (12 ஆவது சம்பள அளவுத் திட்டம் ஆரம்பம்) (எம்என் 3-2006ஏ)* | *ரூபா 17,485* |
| I தரம் | *மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (23 ஆவது சம்பள அளவுத் திட்டம் ஆரம்பம்) (எம்என் 3-2006ஏ)* | *ரூபா 21,045* |
| விசேட தரம் | *மாதாந்தம் ரூபா 20,030 - 11 X 365 - 18 X 500 - ரூபா 33,045 (எம்என் 7-2006ஏ)* | *ரூபா 21,125* |

*4.* **பதவியின் சேவை நிபந்தனைகள் :**

*4.1* *பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். நியமனம் 3 ஆண்டு தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டது. அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கு தயாராக இருக்க வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் காணப்பட்ட அரச சேவையில் நியமிக்கப்படுவதற்கு உரிய பொது நிபந்தனைகள் மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவை யாப்பு மற்றும் அதற்கு காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், அரச சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள், நிறுவனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசினால் அரச சேவை தொடர்பாக வெளியிடப்படும் மற்றும் செய்யப்படும் வேறு கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு தெரிவுசெய்யப்படுபவர்கள் கீழ்ப்படிய வேண்டும்.*

*4.2* *பயிற்சி அளிக்கப்படும் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு ஆண்டுகள் பயிற்சி முடிந்த பின்னர் கலந்துகொள்ள வேண்டிய தகைமைப் பரிசோதனையில் சித்திபெற்றால், இலங்கை தொழில்நுட்ப சேவையின்* III *ஆம் தரத்தில் நியமனம் செய்யப்படுவார்கள்.*

*4.3* *அரச மொழி அல்லாத மொழி ஊடாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் நியமனம் பெற்ற திகதியில் இருந்து 3 ஆண்டு காலத்துக்குள் அரச மொழிப் பரீட்சையில் சித்திபெற வேண்டும். குறித்த காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்திபெற தவறும் பட்சத்தில் அடுத்து வரும் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.*

*4.4* *நிரந்தர நியமனத் திகதியில் இருந்து 5 ஆண்டு காலத்துக்குள் அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இல் காணப்படும் வண்ணம் தமது பதவிக்குரிய மட்டத்தில் இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிய காலத்துக்குள் அத்தகைய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டால் அந்த தேர்ச்சியைப் பெறும் வரைக்கும் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.*

*4.5* *தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கடமையைப் பொறுப்பேற்கு முன்னர் 7 ஆண்டு குறைந்தபட்ச சேவைக் காலத்திற்கு திணைக்களத்தில் சேவை புரிவதாகவும், அவர் அந்த காலப்பகுதியில் திணைக்களத்தில் சேவை புரிவதற்கு இயலாமல் போனால் 2,50,000 ரூபா பெறுமதியான பணத்தை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குச் செலுத்துவதாகவும் திணைக்களத் தலைவர் ஊடாக ஏற்றுக்கொள்ளத்தக்க பிணையாளர்கள் இரண்டு பேருடன் உடன்படிக்கை செய்து கையெழுத்திட வேண்டும்.*

*4.6* *கடமை நேரம் அனைவருக்கும் பொதுவான அலுவலக நேரம் அல்ல என்பதுடன் இரவு பகல் இரண்டு வேளையும் மற்றும் சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் கடமைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். முறைமாற்றுக் கடமைக்கு ஏற்ப கடமை புரிதல் வேண்டும்.*

*4.7* *அவர்கள் தீவின் எந்தப் பிரதேசத்திலும் கடமை புரிய வேண்டும்.*

5. **தகைமைகள் :**

5.1 அடிப்படைத் தகைமைகள் :

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் ;

(ஆ) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஆகக்குறைந்த வயது 18 ஆகவும் ஆகக்கூடிய வயது 30 ஆகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) தற்போது அரசாங்கத்தில் நிரந்தரமாகவுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை பொருத்தமற்றது.

5.2 கல்வித் தகைமைகள் :

(அ) மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அத்துடன்

(ஆ) ஒரே முறையில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். பாடத்தொகுதி கீழ்க்குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டும் :

(1) பௌதிக விஞ்ஞானம், தூய கணிதம், பிரயோக கணிதம்;

(2) பௌதிக விஞ்ஞானத்துடன்-

(i) தூய கணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று ;

அத்துடன்

(ii) இரசாயன விஞ்ஞானம்/விவசாய விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம்/கணனி விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்று

5.3 உடல் தகைமை.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்றதான உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆட்சேர்ப்பு செய்த பின்னர் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனையில் தகுதி இன்மை உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்குப் பொருத்த மற்றவர் என்று கருதப்படுவார்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு உரிய தகைமையை விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப் படுத்தி இருப்பது கட்டாயமாகும்.

6. **பரீட்சை திட்டம்**.- பரீட்சை இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது.

| | பெறக்கூடிய மொத்தப் புள்ளிகள் | தகுதி பெறுவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| (i) பொது விவேகம் | 100 | 40% | 1 மணி நேரம் |
| (ii) விடயம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 40% | 2 மணி நேரம் |

7.1 பாட விதானம்:

(i) பொது விவேகம்.- இந்த வினாத்தாள் விண்ணப்பதாரியின் தர்க்க அடிப்படையில் சிந்திக்கும் ஆற்றல், அவரின் ஆய்ந்தறியும் திறன், முடிவெடுக்கும் வல்லமை, தீர்ப்புக் கூறல் போன்ற பல்தரப்பட்டதும் சுருக்க விடை தருவதற்குமான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். வினாக்கள் அனைத்துக்கும் விடையளிக்க வேண்டும் ;

(ii) விடயம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள்.- பௌதிக விஞ்ஞானம் தொடர்பான க. பொ. த. (உ. த.) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான அறிவை உறுதிப் படுத்தும் வினாக்கள் அடங்கியது. எல்லா வினாக் களுக்கும் விடை அளிக்க வேண்டும்.

8. **தெரிவுசெய்யும் முறை :**

8.1 எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய உயர்ந்த புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து, நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள், பெறுபேறுகளின் திறமை வரிசைக் கிரமத்துக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். (நேர்முகத் தேர்வின்போது அடிப்படைத் தகைமையை உறுதிப்படுத்த முடியாத விண்ணப்பதாரிகள், பரீட்சையில் உரிய தகைமையைப் பெற்றிருந்தாலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள்.)

9. ஆட்சேர்ப்பு செய்தல்.- பயிற்சி அளிக்கப்படும் தரத்துக்கு தெரிவுசெய்யப்படுபவர்கள் இரண்டு ஆண்டு பயிற்சி முடிந்த பின்னர் இடம்பெறும் பரிசோதனையில் தேறிய பின்னர் இலங்கை தொழில்நுட்ப சேவை III தரத்தில் நியமனம் செய்யப்படுவார்கள்.

10. **விண்ணப்பப்படிவம் தயாரித்தல் :**

10.1 தான் பரீட்சை எழுதவிருக்கும் மொழியிலேயே விண்ணப்பப் படிவத்தை தயாரிக்க வேண்டும்.

10.2 சிங்களம் மற்றும் தமிழில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களின் தலைப்பை குறிப்பிட்ட மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்.

10.3 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய செ. மீ. 21 x 29 (ஏ4) அளவைக் கொண்ட தாள்களில் அவற்றின் இரு பக்கங் களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 4 (உ) வரையிலான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும், இலக்கம் 5 தொடக்கம் 9.3 வரையுள்ள

தலைப்புகள் 2 ஆம் பக்கத்திலும், இலக்கம் 10 தொடக்கம் 15 வரையிலான தலைப்புகள் 3 ஆம் பக்கத்திலும், இலக்கம் 16 தொடக்கம் 17.3 வரையுள்ள தலைப்புக்கள் 4 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டும்.

11. **விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துதல் :**

11.1 விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தில் படிவத்தை நிரப்ப வேண்டும் ;

11.2 பரீட்சை எழுதும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனால் சரியான முறையில் நிரப்ப வேண்டும் ;

11.3 பரீட்சை மையங்களின் இலக்கங்களை துணைப்பிரிவு 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு குறிக்க வேண்டும். (பரீட்சை மையத்தின் இலக்கத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது. எனினும், யாதேனும் மையத்துக்கு போதுமான அளவு விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப் பத்தில் அந்த மையத்தினை நீக்கிவிட்டு விண்ணப்பதாரிக்கு அருகில் உள்ள மையத்துக்கு அனுப்பப்படுவார்கள்) ;

11.4 பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பின் அதற்கான பற்றுச்சீட்டை அதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஒட்ட வேண்டும் ;

11.5 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகார வலு பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் அல்லது அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாவது அல்லது சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

11.6 தவறான தகவல்களை வழங்கல்.- எவரேனும் விண்ணப்ப தாரிக்கு இந்தப் பரீட்சையில் கலந்துகொள்வதற்கு தகைமை இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டால், அல்லது சமர்ப்பிக்கப்படும் யாதேனும் தகவல் தவறானது என்று தெரிந்திருந்தும் அதைச் சமர்ப்பித்திருந்தால் அல்லது யாதேனும் முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத் திருந்தது கண்டுபிடிக்கப்பட்டால், பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அவரது பரீட்சை விண்ணப்பத் தகைமை செல்லுபடி அற்றதாக ஆக்கப்படுவ தற்கும், நியமனம் பெற்ற பின்னர் அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டால் சேவையில் நின்று நீக்கப்படுவதற்கும் இடம் உண்டு.

12. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :**

12.1 பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை 2013, ஒற்றோபர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்க வேண்டும் :

12.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஏற்பாட்டுக் கிளை,
பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

12.3 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களங்களின் தலைவர் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனம், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்கள் தமது நிறுவனத்தலைவர் ஊடாகவும் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

12.4 விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - வளிமண்டலவியல் திணைக்களம்'' என்று தெளிவான எழுத்தில் குறிப்பிட வேண்டும்.

12.5 விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் போட்டோ பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

13. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அனுமதி அட்டைகளை வழங்குதல் :

13.1 குறித்த மாதிரிப் படிவத்துக்கு அமைவாகக் காணப்படாத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தாத மற்றும் பிழையற்ற விதத்தில் பூரணப்படுத்தப்படாது பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பங்கள், எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தாமை யினால் ஏற்படும் இழப்புக்கு விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பத்தின் போட்டோ பிரதி தம்முடன் வைத்திருப்பது பயனுள்ளது. பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப்படிவத்துக்கு அமைய இருக்கின்றதா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு காணப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

13.2 விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அஞ்சலில் தவறிப்போகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் எவ்வித முறைப்பாடும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

13.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்பது அடிப்படை நிபந்தனையாகும். உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்வதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் இடம் அளிப்பார். போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்வதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது, விண்ணப்பதாரி இந்தப் பரீட்சையில் கலந்து கொள்வதற்கு அல்லது இந்தப் பதவி தொடர்பான தகைமையைக் கொண்டிருக்கின்றார் என்று

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருத இயலாது. விண்ணப்ப தாரிகளை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகைமைகள் இருக்கின்றதா என்று பரீட்சிக்கும்போது தேவையான தகைமை இல்லாமை கண்டுபிடிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் செல்லுபடியற்றதாக்கப்படும்.

13.4 விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பிய வுடன் அதுபற்றிய செய்தித்தாள் விளம்பரம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். விளம்பரம வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள வாறு அது தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக் களத்துக்கு அறிவிக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்துக்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை அஞ்சலில் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டு அவற்றுடன் தங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைப் பிழையின்றி குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தில் விசாரணை செய்வது நல்லது. தாங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியானால் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு மேலே குறிப்பிட்ட விபரங்களுடன் தங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் ஊடாக அனுப்பிவைப்பது சிறந்தது.

14. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமான மீளப்பெற முடியாத தொகையான ரூபா 750 ஐ வளிமண்டலவியல் திணைக்கள பதிவாளர் நாயகத்தின் பெயருக்கு, இலங்கை வங்கி, டொரிங்டன் கிளை, கணக்கு இலக்கம் 7042678 இற்கு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை கழன்று விழாதவாறு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

15. **பரீட்சைக்குத் தோன்றுதல்** :

15.1 பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மண்டப அதிபரிடம் தமது கையொப்பம் சான்றுபடுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் தங்களுக்கு பரீட்சை எழுத அனுமதி அளிக்கப்படமாட்டாது. மேலும், விண்ணப்ப தாரி தனக்கு குறிக்கப்பட்டுள்ள மையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

15.2 பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாக வேண்டும். அவ்வாறான ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிய வேண்டும்.

16. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோன்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை மண்டபத் தலைவர் திருப்திப்படும் வண்ணம் விண்ணப்பதாரி தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதன் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

17. இங்கு குறிப்பிடப்படாத யாதேனும் விடயம் எழுந்தால், அது தொடர்பில் வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம் தீர்மானம் எடுப்பார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய நடந்துகொள்வதற்குக் கடமைப்பட்டவர்கள் ஆவர்.

எஸ். எம். காரியவசம்,
வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2013.08.27.

**அட்டவணை**

**பரீட்சை நிலையங்களின் பெயரும் இலக்கமும்**

| பரீட்சை நிலையத்தின் பெயர் | பரீட்சை நிலையத்தின் இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| குருநாகல் | 04 |
| அநுராதபுரம் | 05 |
| இரத்தினபுரி | 06 |
| பதுளை | 07 |
| யாழ்ப்பாணம் | 08 |
| வவுனியா | 09 |
| மட்டக்களப்பு | 10 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை தொழில்நுட்ப சேவையில் (வளிமண்டலவியல் அவதானி/ தொடர்பாளர் பதவிகளுக்கான) பயிற்சி அளிக்கப்படும் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

Open Competitive Examination for Recruitment of Meteorological Observers/Communicators to the Training Grade of the Sri Lanka Technological Service - 2013

* பரீட்சைக்குத் தோன்றும் மொழி ஊடகம் : ☐

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் பரீட்சை மையம் மற்றும் அதன் இலக்கம் :

| விருப்ப முன்னுரிமை இலக்கம் | பரீட்சை மையம் | மையத்தின் இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

(வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பிரிவு இலக்கம் 1 இற்கு அமைய தாங்கள் பரீட்சை எழுத விரும்பும் மையங்கள் மற்றும் அவற்றுக்குரிய இலக்கங்களை விருப்பவாரியாக குறிப்பிடவும்.)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரத்தக்கதாக முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :
உதா : (SILVA, A. B. C.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் நிரப்ப வேண்டும்.)

(ஆ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரத்தக்கதாக முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு./ திருமதி/செல்வி :----.

(இ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஈ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்), (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களால் நிரப்பப்படல் வேண்டும்.) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. பால் : ஆண் - 0

பெண் - 1

(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

4. நிரந்தர முகவரி :
(அ) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ஆ) ஆங்கிலத்தில், (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களால் நிரப்பப்படல் வேண்டும்.)
(இந்த முகவரிக்கே நுழைவு அனுமதிப்பத்திரம் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(இ) நிரந்தரமாக வதியும் மாவட்டம் :----.

(ஈ) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(உ) தங்களின் தொலைபேசி இலக்கம் :

நிரந்தரம் :----. நடமாடும் :----.

5. (அ) பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2013.10.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

6. திருமணமானவரா?/ திருமணமாகாதவரா ? :

திருமணமானவர் - 1

திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

7. இனம் :

சிங்களவர் -1, தமிழர் - 2, ஏனையோர் - 3
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்).

8. கல்வித் தகைமை :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

முதல் அமர்வு :
ஆண்டு :----.
பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாம் அமர்வு
ஆண்டு :----.
பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில் தகைமை/தொழில்நுட்பத் தகைமை :

9.1 பெற்றுள்ள பட்டம்/டிப்ளோமா :----.
9.2 குறித்த பட்டம்/டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் :----.
9.3 குறித்த பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

10. ஏனைய தகைமைகள் : ......................................................
......................................................................................
......................................................................................
......................................................................................
......................................................................................

11. நீங்கள் குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப் பட்டிருக்கிறீர்களா ? அல்லது தற்போது தங்களுக்கு எதிராக யாதேனும் நீதிமன்ற நடவடிக்கை உள்ளதா ? :----. ஆம்/இல்லை

11.1 ஆம் எனில் விபரம் தருக : ...................................
......................................................................
......................................................................

12. விண்ணப்பதாரி தற்போது அரசாங்கத்தில்/மாகாண அரச சேவையில் தொழில் புரிந்து கொண்டிருந்தால், பதவியின் பெயர், சேவை புரியும் திணைக்களத்தின் பெயர் மற்றும் முகவரி : ..............

13. விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்கத்தில்/மாகாண அரச சேவையில் தொழில் புரிந்து விலகியவராக இருப்பின், அவ்வாறு விலகியதற்கான காரணம் : ...................................................
......................................................................................

14. **பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய தகவல் :**

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கியின் பெயர் :----.
14.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
14.3 பணம் செலுத்திய திகதி :----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே கழன்று விழாதபடி ஒட்டவும்.<br>ஒட்டிய பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை வைத்திருக்கவும். |

15. **விண்ணப்பதாரியின் சான்றுரை :**

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று அறிக்கை இடுகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இந்த வெளிப்படுத்தல் உண்மையற்றது என்று நிரூபிக்கப்பட்டால், நான் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் கிடைத்த பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் அறிந்துள்ளேன்.

(இ) ................................ ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளேன்.

(ஈ) மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் கொண்டுள்ள சட்டவிதிகளுக்கு நான் கட்டுப்பட்டவனாவேன் என்றும் அறிக்கை இடுகின்றேன்.

(உ) இங்கு குறிப்பிட்ட தகவல்களை பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்.-** இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................ ..................... என்ற பெயர் கொண்டவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ................................ ............ ஆந் திகதி எனது முன்னிலையில் மேலே 15 ஆம் பிரிவின்கீழ் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப் படுத்துகின்றேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை இடவும்.) :----.
திகதி :----.

17. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் : (அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்):**

17.1 மேலே தகவல்கள் வழங்கியுள்ள திரு./திருமதி/செல்வி ..................................................................

அலுவலத்தில் கடமையாற்றுகின்றார் என்றும் அவர் ........................................... ஆந் திகதி தொடக்கம் ........................................... பதவியில் கடமை புரிகின்றார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

17.2 அலுவலரின் தனிப்பட்ட கோப்புக்கு அமைய, விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் ஐந்து ஆண்டுகள் வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானவை/திருப்தியற்றவை

சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார்/பெற வில்லை.

எந்த ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை/ உட்பட்டிருக்கின்றார்.

(ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருந்தால், விபரத்தைக் குறிப்பிடவும்.) : ................................................ ................................................................................ ................................................................................

17.3 விண்ணப்பிக்கப்படும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியில் இருந்து அலுவலரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை :

திகதி :----.

9-399

---

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப III ஆம் தரத்தில் பதவி (எம். ரீ. 01-2006ஏ) இல் இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப III ஆம் தரத்தில் பதவி (எம். ரீ. 01-2006) இல் திறந்த போட்டிப் பரீட்சை அடிப்படையில் இணைத்துக்கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகளுள்ள ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்காக தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| 1. புகைப்படம் எடுத்தல் | 01 |
| 2. வீடியோ கமெரா எடுத்தல் | 01 |
| 3. பகுப்பாளுதல் | 01 |
| 4. ஒலி தொழில்நுட்பம் | 01 |
| 5. வாகன பராமரிப்பு | 01 |
| 6. மின்சார உபகரண பராமரிப்பு | 01 |
| 7. கட்டிட பராமரிப்பு | 01 |

3. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் :**

| பதவி | தொழில்நுட்ப உதவியாளர் |
|---|---|
| கல்வித் தகைமைகள் | மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்கலாக இரண்டு தடவைக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் (06) கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல். |
| தொழில்சார் தகைமைகள் | ஒவ்வொரு துறையிலும் பணிபுரிவதற்கான இரண்டாம்தர கல்விக்கு அடுத்த மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 05 ஆவது மட்டத்திற்கு உட்பட்ட வகையில் ஏற்ற தொழில்நுட்ப பாடத்திட்டத்தில் சித்திபெற்றதாக சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| | துறைகள் என்ற வகையில் அரசாங்க திரைப்படப் பிரிவில் புகைப்படமெடுத்தல், வீடியோ கமெரா எடுத்தல், பகுப்பாளுதல், ஒலி தொழில்நுட்பம், இரசாயனகூட வேலை, மோட்டார் வாகன பராமரிப்பு மற்றும் மின்சார உபகரண மற்றும் கட்டிட பராமரிப்பு உள்ளடங்கும். |

4. **உடற் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் தேவைப்பட்ட பிரதேசங்களில் கடமையாற்றவும், பதவிசார் கடமையை நிறைவேற்றவும் போதியளவு உடல் மற்றும் உள ரீதியில் தகைமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

5. **வேறு தகைமைகள்**.- (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான மேற்கூறப்பட்ட தகைமைகள் முழுமையாக பெற்றிருத்தலுடன் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானியில் கூறப்பட்ட திகதியன்று அந்த தகைமையை எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

6. **வயது**.- விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. **இணைத்துக்கொள்வதற்கான எழுத்துப் பரீட்சை**.- (i) இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கொழும்பு நகரில் மாத்திரம் நடாத்தப்படும்.

| வினாத்தாள் | | சம்பந்தப்பட்ட விடயங்கள் | காலம் | முழுப் புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | விவேகப் பரீட்சை | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான அணுகு முறை மற்றும் ஆய்வுமூல அணுகுமுறை அதன் மூலம் முடிவெடுக்கும் திறமை ஆகியவற்றை உள்ளடக்கியவாறு வினாக்கள் | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. | சம்பந்தப்பட்ட விடயத்தில் பரீட்சை | பதவிகளுக்கு ஏற்ற விதத்தில் பல்வேறு விடைகள் அடங்கிய வினாக்களும் தாமே தெரிந்து எடுக்க கூடிய விதத்தில் உள்ளடக்கப்படும் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

8. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665
எம். ரீ. - 1 - 2006 (ஏ) (பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 (iv) இற்கு இணங்க)

9. **சேவைக்கான நிபந்தனைகள்** :

* தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தீவின் எப்பாகத்திலும் கடமை புரிய உடன்படல் வேண்டும்.
* இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமானது.
* நியமனம் பெற்றவர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

10. இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4 தாளில் இரு பக்கங்களிலும் இல. 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும் ஏனையவை இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கங்களிலும் சேர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும். அறிவித்தலில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பரீட்சைக்கு இரு வாரங்களுக்கு முன் அவர்கள் விண்ணப்பத்தில் வழங்கிய விலாசத்திற்கு அறிவிக்கப்படும் :-

(i) தபாலில் தவறப்பட்டதெனவோ அல்லது தாமதமாகியது சம்பந்தமான முறைப்பாடுகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 05" என்ற விலாசம் தவிர்ந்த வேறு விலாசத்துக்கு அனுப்பிய விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை தத்தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவாரென நிறுவனத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தின் போட்டோ பிரதி ஒன்றை தம்முடன் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.

(v) அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட்டால் மாத்திரம் விண்ணப்பதாரி தனது தகைமைகளை பூர்த்திசெய்துள்ளாரென கருதப்பட மாட்டார்.

13. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு கீழ்க்காணும் விபரங்களுடன் (தொலைபேசி/தொலைநகல் : 011-2514092) மூலம் அறிவித்தல் வேண்டும் :

* விண்ணப்பம் சம்பந்தமான கடிதம் ;
* பரீட்சையின் பெயர் ;
* பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
* தேசிய அடையாள அட்டை இலக்கம் ;
* பரீட்சார்த்தியின் விலாசம் ;
* விண்ணப்பத்தின் போட்டோ பிரதி ;
* விண்ணப்பத்தை அனுப்பிய தபால் கந்தோர், பதிவுசெய்த இலக்கம் மற்றும் திகதி ;
* பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய ரசீதின் போட்டோ பிரதி ;
* அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பரீட்சார்த்தியின் தொலைமடல் இலக்கம்.

14. **விண்ணப்பிக்கும் வழிமுறை**.- (அ) கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் உள்ளடக்கப்பட்ட தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013" எனக் குறிப்பிட்டு 2013.10.15 ஆந் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவுத் திகதி 2013.10.15 ஆகும்.

(இ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 இற்கான காசுக் கட்டளையை கொழும்பு, பிரதம தபாலகத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மீளச்செலுத்தப்பட மாட்டாது.

15. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/இலங்கை கல்வி நிர்வாக சேவை/இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரால்/அரசாங்க பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி/வருடாந்தம் திரட்டிய அடிப்படைச் சம்பளமாக ரூபா 2,40,360 பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டும் :-**

* விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டிருந்தவை யாவும் பூரணப்படுத்தப்படுவதுடன் வழங்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவையெனவும் பரீட்சார்த்தி அத்தாட்சிப்படுத்த வேண்டும்;
* சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் ;
* இவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க தகவல் திணைக்களத்தினால் இயற்றப்பட்ட கொள்கைகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், ஏனைய அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.
* சகலதையும் அல்லது தீர்மானிக்கப்பட்ட அளவுள்ள வெற்றிடங்களை மட்டும் நிரப்பும் முழு அதிகாரமும் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.
* இப்பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படும்போது பொது சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டதோ அல்லது உள்ளடக்கப்படாத சில சந்தேகத்துக்கிடமான விடயங்கள் சம்பந்தமாக அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் முடிவு இறுதியானது. வர்த்தமானியில் வெளிவந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில விபரங்களில் ஏதாவது வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழியில் உள்ளதே சரியானதாகக் கொள்ளப்படும்.

(பேராசிரியர்) ஆரியரத்ன அத்துகல,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை அவெனியூ,
கொழும்பு 05,
2013, ஒகத்து 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப III ஆம் தரத்தில் (எம். ரீ. 01-2006ஏ) இல் இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

விண்ணப்பிக்கும் பிரிவு : ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம் - 01
தமிழ் - 02
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

1\. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணமாக : Mr./Mrs./Miss. SILVA A. B)

1.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2\. 2.1 விலாசம் (தனிப்பட்ட) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :---.

2.2 விலாசம் (தனிப்பட்ட) (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.2 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. ஆணா/பெண்ணா :----.

6. கல்வித் தகைமைகள் :

(அ) கல்வி பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்)
பரீட்சை :----.
வருடம் :----.
பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஈ) வேறு விசேட தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபாற்கந்தோர் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய பணம் :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை (ரூபா 500) ஐக் கழன்று போகாத விதத்தில் இங்கு ஒட்டவும். |

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டிய விதத்தில் இங்கே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். நான் பிழையான விபரங்களை வழங்கியிருப்பதாக தெரியவந்தால் பரீட்சைக்கு முன்போ அல்லது பின்போ எனது பரீட்சார்த்திக்கான தகைமையை இழப்பேன் எனவும் தெரிவுசெய்யப்பட்ட பின்பு தெரியவந்தால் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................................................ .................. ஐ எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமெனவும் எனது முன்னிலையில் ............................................................ ஆந் திகதியன்று அவர் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இங்கு உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

9-401